ஸ்ரீ சண்முக வித்தியாலய தாபகர்

# அன்னை
# தங்கம்மா சண்முகம்பிள்ளை



ஜெ. அருஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தங்கம்மா



**திருகோணமலை**
**ஸ்ரீ சண்முக வித்தியாலயத் தாபகர்**

## திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை

***1863.08.15 - 1953.05.02***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்

திருமதி. ஜெ. அருஷா
இல. $36^A$, 4ம் ஒழுங்கை,
கண்ணகிபுரம், உவர்மலை,
திருகோணமலை, இலங்கை.
0094 77 748 8489 - 0094 26 454 5294
arushavehnu@gmail.com



புத்தக வடிவமைப்பு, அட்டைப்படம், பதிப்பு

றிங்கோ பிரிண்டர்ஸ்
159, மின்சாரநிலைய வீதி,
திருகோணமலை, இலங்கை.
0094 70 355 5740 - 0094 262 8677

முதற்பதிப்பு

மார்கழி 2017 - திருகோணமலை



உரிமை

DIRECTOR, PARADISE PLAY SCHOOL, TRINCOMALEE



ISBN : 978-955-4036-04-8

வெளியீடு:

பக்கங்கள் - 62
அளவு - ஏ5
தாள் - 70 gsm ஐவரி
விலை - ரூபா 300.00



இந்தப்புத்தகத்தின் எந்தப்பகுதியையும் பதிப்பாளரின் எழுத்தாலான முன்னனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடைசெய்யப்பட்டதாகும்.
புத்தக விமர்சனத்திற்கு மட்டும் இப்புத்தகத்திலிருந்து மேற்கோள்காட்ட அனுமதிக்கப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவர் திரு. சி. சண்முகம்பிள்ளையுடன்
ஸ்ரீ சண்முக வித்தியாலய தாபகர்
திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருஷாவின் அரும்பணி வாழ்க!
## அம்பாள் அருட்கடாட்சம் பெறுக!

பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்.
(சமாதான நீதவான்)
ஆலயப் பிரதம குருவும் ஆதினகர்த்தாவும்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருகோணமலை.

உங்கள் கரங்களில் தவழும் திருமதி அருஷா ஜெயராஜா அவர்கள் எழுதியுள்ள இந்நூல் திருகோணமலை மண்ணில் மங்கையர் கல்விபற்றிய கரிசனையுடன் தொன்னூறுகளிலேயே பாரிய பணியாற்றிய தம்பலகாமம் பட்டிமேடு மண்ணீன்ற, திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய ஸ்தாபகர் அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் வரலாற்றைப் பறைசாற்றுகிறது. திருகோணமலை மண்ணின் பெண்கல்வி வரலாற்றினை இந்நூல் ஆவணப்படுத்துகிறது எனலாம்.

அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள் திருகோணமலை மண்ணின் மங்கை. பெண்கள் கல்விபற்றி சிந்தித்து, அச்சிந்தனைக்கு வடிவம் கொடுத்து பணியாற்றியவர். திருகோணமலையில் இந்துப் பெண்கள் கல்விக்கென ஒரு பெண்பாடசாலையைத் தனது சொந்தப்பணத்தில் ஆரம்பித்த வள்ளல். சைவசமய பாரம்பரியத்தில் ஊறியவர்.

அவர் தாபித்த திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயம் இன்று ஆலவிருட்சமென ஓங்கிநின்று பணிபல ஆற்றுகிறது. இம்மண்ணில் பெண்கல்விக்குப் பாரிய பங்களிப்புச் செய்துவருகிறது என்பது நாமறிந்த விடயம். நாடறிந்த விடயம்.

இப்பாடசாலையின் சமய, கல்வி, கலாசார வைபவங்களில் பெரும்பாலும், யானும் பங்குகொண்டு வருவதால் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சி கண்டு, அதன் பங்களிப்பு கண்டு அதனைப் பாராட்டுவதுண்டு. காலத்துக்குக் காலம் இங்கு சேவைசெய்த, தற்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கு நமது பாராட்டுக்கள்.

இந்நூலாசிரியர் திருமதி அருஷா ஜெயராஜா அவர்கள் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருகோணமலையில் உவர்மலையில் உள்ள பரடைஸ் ப்ளே ஸ்கூல் அதிபர். ஸ்ரீ சண்முகவித்தியாலய முன்னாள் மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலாய் நூல் எழுதும் என் எழுத்துக்களைச் சீர்திருத்தித் தந்து எனக்குப் பெரும் உதவி செய்த கல்லூரி அதிபர் திருமதி. ஜெ.சுலோச்சனா அவர்களுக்கும், உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் முன்னால் அதிபர் திரு.சிதம்பரப்பிள்ளை நவரட்ணம் அவர்களுக்கும், சிறகுகள் கல்வி நிலைய நிறுவனர் திரு.தில்லைநாதன் பவித்திரன் அவர்களுக்கும், ஆசிரியர் வே.வரதசுந்தரம் அவர்களுக்கும் எனது நன்றிகளை சிரந்தாழ்த்தி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலினை எழுதுவதற்கு எனக்கு உதவிய தி/ ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நிரிவாகத்தினர், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலிற்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்திகள் வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலினை எழுதுவதற்கு எனக்கு உதவி செய்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலினை எழுதுவதற்காகச் சென்ற போது பல இடங்களில் எனக்கேற்பட்ட பின்னடைவான சம்பவங்களினால் நான் கவலைக்குள்ளான சமயங்களில் எனக்கு ஊக்கமளித்து தொடர்ந்தும் இந்நூல் முழுமைபெற என்னை வழிநடத்திய செல்வி.விமலா நடராஜா , திரு.க.சக்திபவன், திரு.இரா.சிறீ-ஞானேஸ்வரன் (தலைவர் முத்தமிழ்ச் சங்கம், திருகோணமலை) ஆகியோருக்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்நூலைப் பிரசுரிக்க முன்வந்த முத்தமிழ்ச் சங்கத்திற்கும், இந்நூலினை இத்தனை அழகாக அச்சிட்டுள்ள ட்ரிங்கோ ப்ரின்டர்ஸ் உரிமையாளர் திரு.இரா.சிறீஞானேஸ்வரன் அவர்களுக்கும் அவரது ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

பெண்பிள்ளைகளின் விடியலுக்காய் இப்பாடசாலையை தாபித்து எம்மை வாழ வைத்த அன்னைக்கு இதுவரை இங்கே படித்த, படித்துக் கொண்டிருக்கும் மற்றும் படிக்கப் போகும் மாணவியர் சார்பாக இந்நூல் சமர்ப்பணம்.

பணிப்பாளர், பரடைஸ் ப்ளே ஸ்கூல் அன்ட்
எடியுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்
திருகோணமலை. 03.12.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வளர்க தங்கம்மாவின் தர்மப்பணி"

செல்வி. விமலா நடராஜா,
செயலாளர்,
ஸ்ரீ சண்முக தர்ம தாபனம்.

"திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயம் தாபகர் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை" அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை முதன் முதலாக நூல் வடிவத்தில் எழுதிய திருமதி. அருஷா ஜெயராஜாவை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவிலிருந்து க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்று சித்தியடைந்து வெளியேறிய பின்பும் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் பெருமையை நினைவு கூர்ந்து அவரால் தாபிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் இன்று உலகளாவிய ரீதியில் புகழ் பெற்று முன்னணியில் நிற்கும் வேளையில் இந் நூலை திருமதி. அருஷா ஜெயராஜா அவர்கள் வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாபகரின் நினைவு நாள் வருடந்தோறும் வெகு சிறப்பாக இக்கல்லூரியில் கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகும். அத்தினம் தாபகர் பற்றிய கட்டுரைகளும், கவிதைகளும், பேச்சுப் போட்டிகளும் நடைபெற்று பல பரிசில்களும் வழங்கப்படும். இப்பேற்பட்ட நிகழ்விற்கு திருமதி. அருஷா ஜெயராஜா அவர்களினால் முதன் முதலில் வெளியிடப்படுகின்ற இந்நூல் உறுதுணையாக இருக்கும் என்பது வெள்ளிடை மலையாகும். இந்நூலினை சகல மாணவர்களும், ஆசிரிய பெருந்தகைகளும் பெற்று தங்கம்மாவின் புகழை நிலைநிறுத்த வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திருகோணமலையில் உவர்மலையில் பரடைஸ் ப்ளே ஸ்கூலில் அதிபராக கடமையாற்றும் இவர் இந்நூலினை வெளியிட்டதன் நோக்கம் யாதெனில் பழைய மாணவர் சங்கத்திற்கு பங்களிப்புச் செய்யும் வகையிலும் அன்னை தங்கம்மாவின் பெருமையை எடுத்துக் கூற வேண்டும் என்பதற்காகவும் இந் நூலினை படைத்துள்ளார் என்பது பாராட்டத்தக்கது. இத்தகைய சேவையை வியந்து நானும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்கைகையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இப்பணியியற்றியதை எண்ணிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன் "

செல்வி. வினோதா விஜயராஜா,
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி.

"மங்கையராய்ப் பிறக்க நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்ற வாக்கிற்கிணங்க மங்கையாப்பிறந்து இந்துப் பாடசாலையின் இக்கல்லூரியை அமைத்து மாணவர்கள் பயன்பெற வழிகாட்டியாகத் திகழ்ந்த அம்மணி திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களை வாழ்த்தி வணங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கிணங்க தனது பணியாக இக் கல்லூரியை உருவாக்கி அதில் இந்து மாணவிகளை கல்வி கற்கச் செய்து அவர்களுக்கு ஒளி வழங்கிய தெய்வத்தாயை வாழ்த்தி வணங்குவதில் மன மகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று பாடசாலை தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது அம்மணி அவர்கள் செய்த அளப்பரிய தொண்டுதான் எனக்கூறின் அது மிகையயாகாது. இந்த வகையில் இக் கல்லூரி கல்வியிலும் இணைபாட விதானத்திலும் கிழக்கு மாகாணத்தில் முன்னணியில் நிற்கிறது எனில் இது அவரது ஆசியினாலும், அளப்பரிய பணியினாலுமே ஆகும்.

எனவே அவருக்காக இம்மலரை வெளியிடும் இவ் வேளையில், அவர்களை நினைத்து, இம்மலரைச் சமர்ப்பணம் ஆக்கி, அவர் புகழ் என்றும் மேலோங்க வேண்டும் என வாழ்த்தி நிற்பதோடு, அவர் இந்த பாடசாலையை அமைத்த சிந்தனைக்கு மேலும் மேலும் வாழ்த்துக்கூறி அவர் மேலோக வாழ்வில் இறைவனது பாதார விந்தத்தில் ஆன்ம ஈடேற்றைப் பெற்றதைப் போற்றுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பேசுகின்றேன்

அருஷா ஜெயராஜா

திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய தாபகர் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் புகழ் பேசும் இச் சரிதத்தினை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஓர் பெண்ணாகப் பிறந்ததையிட்டு பெருமிதம் கொள்ள வழி அமைத்துச் சென்ற பெண் குல விடிவெள்ளி அன்னை. அவரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரைப் பற்றிய பேச்சு ஒன்றை எழுத நேரிட்டபோது எனக்கேற்பட்ட சில அனுபவங்களினாலேயே அன்னையின் வாழ்க்கை வரலாற்றினை முற்றிலும் தழுவிய நூல் ஒன்றினை முதன்முறையாக எழுதி வெளியிடும் எண்ணம் எனக்குள் உருவானது.

அன்னை எம் தமிழினத்திற்காக ஆற்றிய அளப்பரிய தொண்டுகளையும் , சேவைகளையும் கேட்டறிகையில் மிகவும் பெருமைப்படுவதுடன் நாகரிக வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, கணனி யுகம், உள்ளங்கையில் உலகைச் சுழற்றும் கையடக்கத் தொலைபேசி, மனிதர்களின் நேரத் திருடர்களாய் இருப்பினும் அத்தியாவசிய தேவையாக முக்கியம் பெறும் சமூக வலைத்தளங்களென இத்தகைய இயந்திர உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மால் அன்னை முன்னெடுத்துச் சென்ற சேவைகளில் ஒரு வீதமேனும் செய்ய முடியாமல் இருந்து வேடிக்கை பார்க்கும் எம் சாபக்கேட்டை எண்ணி வெட்கப்படுகிறேன்.

நான் ஒரு மாணவியாய் என் பாடசாலையில் கல்வி கற்று முடிக்கும்வரை என் பாடசாலையின் பெருமையை இத்தனை ஆழமாய் உணர்ந்திருக்கவில்லை. பாடசாலையில் 13 ஆண்டுகள் படித்துவிட்டு வெளியேறிய பின் என் பாடசாலையைக் கடந்து சென்ற ஒவ்வொரு நொடியும் என்னை இனம்புரியா ஏக்கத்தில் ஆழ்த்தின. பாடசாலையிலிருந்து விலகிய பின்பும் நான் சென்ற இடமெல்லாம் என் பாடசாலையின் பெயர் எனக்குத் தந்த கௌரவம் என் பாடசாலைக்கு நான் செய்யத் தவறிய நன்றிக்கடனை நினைவூட்டியது. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தான் என் பாடசாலையின் பெருமைகளையும் ,நான் தவறிவிட்ட பொறுப்புக்களையும் உணரத் தொடங்கினேன்.

என் பாடசாலைக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளின் ஆரம்பமாகவே இந்நூலை எழுத ஆரம்பித்தேன். இன்னும் எத்தனையோ கடமைகளைச் செய்து கொடுக்கவேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்காகவும் காத்திருக்கின்றது.

தரம் ஒன்றிலிருந்து உயர்தரம்வரை இக் கல்லூரியில் படித்த நான் இன்று ஓர் பழைய மாணவியாய் இந்நூலினை எழுதுவதற்கு என்னை ஊக்கப்படுத்தி என்றும் எனக்குத் துணை நிற்கும் இறைவன் கோணேசருக்கு என் முதல் நன்றிகள், அடுத்து என் பெற்றோருக்கும், கணவருக்கும் என் நன்றியைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

இந்நூலினை எழுதுவதற்காக முதன்முதலில் அன்னையின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய தகவல்களை எனக்குத் தந்துதவிய திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளையின் உறவினரும், கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி. மு.தேவிகாராணி அவர்களுக்கும் எனது நன்றிகளைத்-தெரிவித்துக்கொள்கின்றேன்.

மிகப் பெருந்தன்மையோடு தன்னால் இயன்ற அத்தனை ஒத்துழைப்பையும் எனக்களித்து இந்நூலை எழுதுவதற்கு எனக்கு உதவிய திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளையின் உறவினர்.முன்னால் வங்கி முகாமையாளர (எச்.என்.பி - திருகோணமலை) திரு. கணேசரட்ணம் சக்திபவன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியருமான செல்வி. மணிமேகலா தேவி கார்த்திகேசு அவர்களும் இந்நூலினை எழுதுவதற்கு தகவல்கள் தந்துதவிகளைச் செய்திருந்தார். அவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் அளித்த ஆவணங்கள் அனைத்தும் அரிதான பொக்கிஷங்கள்.

மிக முக்கியமாக சண்முகா பெண்கள் இல்ல பொறுப்பாளர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் செல்வி. விமலா நடராஜா அவர்களுக்கு நான் எனது நன்றிகளைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பயின்ற பாடசாலையின் வரலாற்றினை, அதன் தாபகர் பற்றிய விபரங்களை பல இடங்களுக்குச் சென்று, பலரை நாடிப் பெற்று பல தகவல்களுடன் இந்நூலை வெளியிடுகிறார். இவரது முயற்சி பாராட்டுக்கு உரியது.

அவரது நூலாக்கப் பணி சிறப்புற திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுமென ஆசிவழங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளமார்ந்த நன்றிகள் - பணி தொடரட்டும்

திருமதி. சுலோச்சனா ஜெயபாலன்,
(B.A Hons. & Dip. in Edu.,)
அதிபர் (SLPS 1) ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரி .

இயற்கை அன்னையின் அரவணைப்பினாலும், தேவராப் பதிகம் பாடப்பட்ட பெருமையுடனும் விளங்கும் கோணமலையில் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்து, தனது உயரிய எண்ணத்தை நிறைவேற்றிய புண்ணிய சொரூபியான அமரர் தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் நினைவாக இம்மலரை வெளியிடும் திருமதி. அருஷா ஜெயராஜா அவர்களுக்கு முதலில் எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

திருமதி. அருஷா ஜெயராஜா அவர்கள் 1992 தொடக்கம் 2005 வரை அதாவது தரம் 1 தொடக்கம் 13 வரை தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற ஒரு மாணவி. படிக்கும் காலத்தில் பாடசாலை மீதும் கற்பித்த ஆசிரியர்கள் மீதும் பண்பும் மரியாதையும் கொண்ட நல்ல ஒழுக்கமுள்ள ஒரு மாணவி.

இந்த பற்றின் காரணமாக இந்நூலை உருவாக்கி அன்னையின் பெருமையை வெளிக்கொணர முன்வந்தமைக்கும், அதனூடாக பல செயற்பாடுகளை செய்ய நினைத்தமைக்கும் அருஷா அவர்களுக்கு பாராட்டை தெரிவித்துக் -கொள்கின்றேன். "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க சண்முகாவைப் பற்றி நூல் உருவாக்கி வெளியிடும் தங்கள் அளப்பரிய பணிக்கு இப்பாடசாலையின் அதிபர் என்ற வகையில் வாழ்த்துக் கூறுவதில் பூரிப்படைகின்றேன்.

அன்னை அவர்கள் ஆரம்பித்து வைத்த இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றுவதில் பெருமகிழ்ச்சி கொள்வதோடு அவரின் பெருமையை எடுத்துக் கூறும் நூலிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. அருஷா ஜெயராஜா அவர்களின் "திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய தாபகர் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை" என்ற நூலை உருவாக்கி வெளியிடும் தங்கள் முயற்சிக்கு இறைவனது ஆசி கிடைக்க வேண்டும் என வேண்டுவதோடு இப்பாடசாலையின் பழைய மாணவியான தாங்கள் பாடசாலைக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணமும், தங்கம்மாவின் பெருமையை எடுத்துக்கூற வேண்டும் என்ற நோக்கத்தையும் வரவேற்று தங்கள் பணி மென்மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# புண்ணிய பூமியில் பூத்த மலர்

தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்-கோணேஸ்வரர் ஆலயம் அமையப் பெற்ற அழகிய திருகோணமலையின் ஆதிகோணேசர் ஆலயத்தினை தன்னகத்தே கொண்டமைந்த தெய்வீகச் சிறப்புமிக்க கிராமம் தம்பலகாமம். தம்பைநகர் என்ற பண்டையப் பெயர் கொண்டமைந்த இக் கிராமத்தின் அழகு அனைவரையும் வசீகரிகரிக்கும்.

கரிய குவளை மலர் மேய்ந்து
கடவாய் குதட்டித் தேனொழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலயர் தம்பை வளநாட்டின்
உரிய கோணை ஈசனுக்கு
ஆங்குற்ற தொழும்பு முறை பூசை
பரிவால் புரிந்து விண்ணவர்போல்
பாரில் வாழ்வுற்று இருந்தனரே.
-திரிகோணாசல புராணம்-

தம்பலகமம் பாரிய அளவில் வயல் நிலங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த பசுமையான கிராமம். இங்கே நான்கு புறமும் வயல் சூழ நடுவிலே மேடுகளிலும், திடல்களிலும் மக்கள் தமது குடியிருப்புக்களை ஏற்படுத்தி மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமத்துக் கோணை ஈசனுக்குத் தொழும்பு முறைப் பூசைகளை அன்புடன் செய்வதனால் தம்பலகாமத்து ஊர் மக்கள் விண்ணவர் போல் இன்புற்று வாழ்கின்றனர் என்று திரிகோணாசல புராணம் கூறுவது இங்கே வாழும் மக்களின் சிறப்பான வாழ்வை எடுத்துரைக்கும்.

கள்ளிமேடு, கூட்டாம்புளி, பட்டிமேடு ஆகியன ஒரே நேர் கோட்டில் அமையப் பெற்ற பிரதேசங்களாகும். பட்டிமேடு பெருமிதம் கொள்ள அங்கு வாழும் மக்களை காத்தருளும் சிந்தாமணிப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். பசு மாடுகளுக்கும், பசுப்பால் உற்பத்திக்கும் பிரசித்தி பெற்ற வணிக நகராய் பட்டிமேடு விளங்கியது. இன்று பல அறிஞர்களையும், கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள தம்பலகாமம், பட்டிமேட்டில் சைவப் பாரம்பரியமிக்க ஓர் விவசாயக் குடும்பத்தில் வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியினரின் குலமகளாய் அம்மையார் தங்கம்மா அவர்கள், 1863ம் ஆண்டு ஆவணி மாதம் 15ந் திகதி பிறந்தார்.

கண்களில் கூர்மையும், செயல்களில் விவேகத்துடன் கூடிய வேகமும் சிறு வயது முதலே அன்னையிடம் குடியிருந்தன. எந்தவொரு செயலையும் நேர்த்தியுடனும், துணிச்சலுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் அவருடைய சிறப்பம்சமாக விளங்கிது. மிகவும் துடிப்பான ஓர் சுட்டிப்பெண்ணாகவே இவர் வளர்ந்தார்.



தம்பலகாமம் ஓர் சிறிய கிராமம். ஆயிரத்தி எண்ணூறுகளில் திண்ணைப் பள்ளி வழக்கமே இருந்து வந்தது. ஆண் பிள்ளைகளுக்கு சைவசமயம், தமிழ், கலாசாரம், பண்பாடு மற்றும் ஒழுக்க நெறிகள் என்பன கற்பிக்கப்பட்டு வந்தன. அக்காலகட்ட வழக்கத்தின்படி பெண்பிள்ளைகள் தமது தாய், பாட்டி, வீட்டிலுள்ள பெரியோர்கள், உறவினர்களின் வழிகாட்டல், வழிநடத்தல்களின்படியே தமக்கான கல்வியினை கற்றுவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கான கல்வியானது தமது குடும்பங்களின் பாரம்பரியம், பெருமை, ஒழுக்கம், பண்பாடு, கலாசாரங்களை நெறிப்படக்கற்று அதனைக் கடைப்பிடிப்பது என்பதாகவே அமைந்திருந்தது.

கோவில்களுக்குச் செல்லும் சந்தர்ப்பங்கள், சமய விழாக்கள், நெருங்கிய உறவினர்களின் மிக முக்கியமான நிகழ்வுகளின் போது மட்டுமே பெண்பிள்ளைகள் தமது பெற்றார், உறவினர் பாதுகாப்புடன் வெளியே செல்லும் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும். பெண்பிள்ளைகளுக்கு வீட்டில் வசிக்கும் அன்னையிடமும், பாட்டியிடமும் கற்றுக்கொள்ளும் வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத்தேர்வதுதான் அவர்களின் கல்வி என்றானதொரு காலமது.

வயது, அறிவு, விருப்பு, வெறுப்பு என்பதற்கப்பால் பெற்றார் திருமண ஏற்பாடு செய்யும் தருணம் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்காமலும், வாதாட்டங்கள் மேற்கொள்ளாமலும் பெற்றோர் தெரிவு செய்பவரை, பெண்பிள்ளை திருமணம் செய்து கொள்ளவேண்டும். புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண்பிள்ளை பவித்திரமாகவும், குடும்பத்தின் நன்மைக்காகவே வாழ்ந்து, அனைவரையும் மதித்து, குடும்பப் பெருமையைக் காத்து தன் தலைமுறையைப் பேணி வளர்க்கும் குலமகளாய் மணம்முடித்துக் கொள்வதுதான் பெண்பிள்ளைகளுக்கான உயர் கல்வி, பட்டப் படிப்பு என்றான வாழ்க்கை வட்டம் சுழற்சியானது.

பெண் கல்வி இவ்வாறான வரையறைக்குள் கட்டுப்படுத்தப் பட்டதொரு காலகட்டத்தில்தான் எம் அன்னை பிறந்திருந்தார். இருப்பினும் அன்னையின் பெற்றோர் மிகவும் சைவப் பாரம்பரியமான வம்சாவழியினர் என்பதால், அன்னைக்குத் தன் வீட்டுத் திண்ணைப்பள்ளியில் சிறிய பராயத்தில் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். ஐந்து வயதிலேயே சமூகக் கட்டுப்பாடுகளுக்கு பெண்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தப்படுவர். இவ்வாறான கட்டுப்பாடுகளுடனேயே சிறுமி தங்கம்மாவும் வளர்ந்திருந்தார்.

இயற்கையாகவே பேரழகுடன் திகழ்ந்த அன்னையின் அழகிற்கு அவரது பண்பாடுகளும், கலாசார நெறிகளும் மேலும் மெருகூட்டின. மிகவும் சைவப் பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததனால் அன்னையின் வளர்ப்பிலும் சைவப் பாரம்பரியம் ஊறியிருந்தது.

பருவ மங்கையாய் அனைவரையும் வசீகரிக்கும் எழிலுடன் தேவதையாய் காட்சியளித்தார் அன்னை. பிறந்த வீட்டில் எல்லோரையும் தன் அன்பினால் ஆட்கொண்டிருந்த பருவ மங்கையாய் அன்னை இவ்வாறு வளர்ந்து நிற்கையில்...

திருகோணமலையில் பெரும் செல்வந்தர் குடும்பத்தில் ஸ்ரீமான் சிற்றம்பலம் தம்பதிகளின் மூன்று ஆண் பிள்ளைகளான சண்முகம்பிள்ளை, பசுபதிப்பிள்ளை, சுவாமிநாதன்பிள்ளை ஆகியோர் மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் செல்வச் செழிப்பின் பெருமைகளை வார்த்தைகளில் வடித்திட முடியாது. யாழ்ப்பாணம், தெல்லிப்பளை ஊரினை பூர்வீகமாய்க் கொண்டிருந்தாலும், வந்தாரை வாழ வைக்கும் எம் கோணேச பூமி தன் மண்ணில் சிற்றம்பலம் ஐயாவின் மூன்று புத்திரர்களையும் சிறப்புடன் வாழ வைத்திருந்தது. எண்ணிலடங்கா சொத்துக்களுடன் ராஜபோக வாழ்வு வாழ்ந்திருந்தனர். இம்மூவரில் ஸ்ரீமான் சண்முகம்பிள்ளை அவர்கள் சமூக சேவைகளில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டார்.

இரக்க குணம் அதிகம் படைத்தவர். ஏழை, எளியோருக்கு தான, தர்மங்கள் செய்து பலருக்கு வாழ்வளித்து வந்தார். இளைஞனாக இருந்த போதும் நற்தொண்டுகள் பல ஆற்றிவந்தார். சண்முகம்பிள்ளை ஐயா அவர்களும் சைவப்-பாரம்பரியத்தில் அக்கறை மிகுந்தவராகவே வளர்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# இறையருள் நிறைந்த இல்வாழ்வு

ஒருசமயம் ஐயா அவர்கள் தனது நண்பர்களுடன் தம்பலகாமத்தின் எல்லைப்புற வனப்பகுதியில் வேட்டைக்குச் சென்றிருந்தார். வேட்டைக்குச் சென்ற இடத்தில்தான் கோவில் ஒன்றில் தன் பெற்றாருடன் நின்றிருந்த அன்னையை தற்செயலாகக் காண நேரிட்டது. கண்ட மாத்திரத்தில் அன்னை மீது காதல் வயப்பட்டார்.

அக் காலகட்டத்தைப் பொறுத்தவரை காதல்த்திருமணம் என்பது பெரும் தண்டணைக்குரிய குற்றமாகும். யாரும் அதனை தம் குடும்பத்தில் அனுமதிப்பதில்லை. அன்னையின் குடும்பம் சைவப்பாரம்பரியம்மிக்க குடும்பமாக இருந்திருந்த போதும் பெரும் செல்வந்தரான ஐயா சண்முகம்பிள்ளையின் குடும்பத்திற்கு அந்தஸ்தில் சமமானவர்களாகவும் இருக்கவில்லை.

இரு குடும்பங்களுமே சமமற்ற நிலையே காணப்பட்ட போதும் அன்னை தங்கம்மா மீது அவர் கொண்ட காதலும், அன்னையின் குடும்பத்தின் பெருமையும், அன்னையின் அன்பும், அழகும், குணமும் ஒருங்கே சேர்ந்து ஐயா அவர்களை இரு குடும்பங்களையும் சேர்ந்த உறவினர்கள் அனைவரது சம்மதத்தையும், ஆசிர்வாதத்தையும் பெற்றிடச்செய்தது.

*1883ம்* ஆண்டு அன்னையின் இருபதாவது வயதில் இருவரதும் திருமணம் இனிதே கைகூடி மிகச்சிறப்பாக திருமண வைபவம் நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலரது ஆச்சரியத்தின் மத்தியில் சாதாரண குடும்பத்தில் பிறந்தும் செல்வந்தர் வீட்டு மருமகளான அன்னை, அனைவரையும் ஆக்கிரமிக்கும் தன் அன்பினாலும் குணத்தினாலும் தன் புகுந்த வீட்டில் எல்லோர் மனதையும் வென்றார். பிறந்த வீட்டின் பெருமைக்கும், புகுந்த வீட்டின் பெருமைக்கும் மேலும் பெருமை சேர்க்கும் நற்குணமிக்க குலமகளாய் அன்னை திகழ்ந்தார்.

சிறந்த கணவனுக்கு எடுத்துக் காட்டாக சண்முகம்பிள்ளை அவர்களும் சிறந்த மனைவிக்கு எடுத்துக்காட்டாக அன்னை தங்கம்மா அவர்களும் ஆதர்ச தம்பதிகளாய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மூலம் எண்ணிலடங்கா நற்செயல்களை நடத்தி வைக்க இறைவன் எண்ணினார் போலும்.

தமக்கென ஓர் வாரிசு இருந்துவிட்டால் அவர்களுக்கான சேவைகளில், தொண்டுகளில் கால தாமதம் வந்து விடலாம் என்று எண்ணி அவர்களை சமூக சேவைகள் செய்யவே படைத்திருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கென்று ஓர் வாரிசு இல்லாத போதும் தம் அன்பினால் நிறைவான வாழ்வையே வாழ்ந்திருந்தனர். வாரிசு என்ற வார்த்தையைக் காரணங்காட்டி அன்னையை வேதனைப்படுத்த யாருக்கும் இடமளிக்காமல் பாதுகாத்தார். பெண்களுக்கான அங்கீகாரங்கள் பெரிதும் மதிக்கப்படாத கால கட்டங்களில் வாழ்ந்திருந்த போதும் அச் சமூக சொல் அம்புகளில் இருந்து ஓர் கேடயமாக அன்னையை காத்திருந்தார் ஐயா அவர்கள்.

இவர்கள் இருவருக்குமே இறை பக்தியும் சமூக சேவைகளில் ஈடுபாடும் ஒருங்கே ஊற்றாயிருந்தன. இதன் விளைவாக பல கோவில்களுக்கும் யாத்திரை செல்வதும், தல தரிசனம் மேற்கொள்வதும் என அவர்களது இல்லற வாழ்வின் பெரும்பான்மையை இறைவழிபாடு ஆட்கொண்டது.

இவர்கள் காலத்தில் இவர்களுக்குச் சமமான செல்வந்தர்கள் பலர் வாழ்ந்திருந்த போதிலும் அவர்கள் மத்தியில் சண்முகம்பிள்ளை தம்பதியினர் தனித்துவமாகத் திகழ்ந்தனர். இறைவழிபாடு, திருத்தலங்களுக்கான தொண்டுகள், சமூக சேவைகள்,ஏழை எளியோருக்கு அன்னதானம் என கணக்குப் பார்க்காமல் பெருமளவு செல்வங்களை செலவு செய்தனர். பல தேசங்களுக்கும் இவர்கள் சென்று தல தரிசனங்கள் பெற்றிருந்தனர். சென்ற இடமெல்லாம் தம்மாலான தான தர்மங்களை தவறாது செய்து வந்தனர்.

சிதம்பரம் நடராசர் கோவிலில் இருந்து இவர்களுக்கான சிறப்புப் பூசைகள் செய்விப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன. இக் கோவிலிற்கும் நிலங்கள் நன்கொடை செய்திருந்தமை இவர்களின் நாடு கடந்த தொண்டுகளின் சிறப்பினை எடுத்துரைக்கும். இந்து சமயத்தின் தொண்டர்களாய்ப் பெரும் சேவையை ஆற்றி வந்தனர். அன்னையின் இறுதிக்காலம் வரை சிதம்பரம் நடராசர் கோவிலில் இருந்து பிரசாதங்கள் அனுப்பப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. பிற்காலத்தில் அவை எப்படி மாறின என்பது பற்றிய தகவல்கள் அறியப்படவில்லை.

இலங்கை முழுவதும் செல்வாக்குமிக்க ஓர் தனவந்தராகவே திரு.சண்முகம்பிள்ளை வாழ்ந்திருந்தார். ஓர் சமயம் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரிக்கு அங்கு கல்வி கற்ற தன் உறவினரின் பிள்ளையைச் சந்திக்கச் சென்றிருந்தார் ஐயா சண்முகம்பிள்ளை. அப்பாடசாலையில் வெள்ளைநிற பாவாடை, சட்டை அணிந்து மாணவிகள் தமிழ்க் கலாசாரத்தின் முத்துக்களாய்த் திகழ்வதைக் கண்டார்.

இலங்கையை வெள்ளையர் ஆண்ட போதும், ஆங்கில மொழி எம்மை ஆட்சி செய்த போதும், வேற்று மதங்களில் மோகம் ஈர்த்துக் கொண்ட போதும் எம் தமிழ் மொழி, எம் கலாசாரம், எம் சமயம் ஆங்காங்கே ஒளிவீசி பிரகாசித்துக் கொண்டுதான் இருந்தது.

இக்காலப் பகுதியில் திருகோணமலையைப் பொறுத்தவரை இந்துக்கள் கல்வி கற்பதற்கு யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய தேவை நிலவியது. இந்து மாணவர்களின் கல்வி இங்கே வரையறுக்கப்பட்ட ஓர் சேவையாகவே காணப்பட்டது. அதிலும் சைவப்பெண் பிள்ளைகள் கல்வி கற்பதில் பெரும் சவால்கள் முட்டுக் கட்டைகளாகவே இருந்திருந்தன. பருவமடைந்த பெண் பிள்ளைகளுக்கான கல்விச் சேவை பெரிதும் முடங்கியே இருந்தது. அதாவது தரம் 5ற்கு மேல் சைவப் பெண் பிள்ளைகள் கல்வி கற்க தடைகள் பல விதிக்கப்பட்டிருந்த சாபமான சமூகக் கட்டமைப்பு மேலோங்கியிருந்த காலமாக இருந்தது.

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியைப் போன்றதொரு பாடசாலையொன்றைப் பெண் பிள்ளைகளுக்காகத் திருகோணமலையிலும் தாபிக்கும் பொன்னான உத்தேசம் திரு. சண்முகம்பிள்ளை ஐயா அவர்களுக்குள் உதித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதியினர் இருவருமே உறவினர்களின் குழந்தைகள் மீது பேரன்பு கொண்டிருந்தனர். அவர்களுள் சண்முகம்பிள்ளை ஐயாவின் பெறாமகனும் கல்வியில் சிறந்த ஆற்றலுடன் விளங்கிய திரு.நாகரெட்ணம்பிள்ளை கிருஸ்ணதாசன் அவர்களை தம் சுவீகாரப் புத்திரனாக தத்தெடுத்துக் கொண்டனர்.



ஓய்வுபெற்ற நீதிபதி
திரு.நாகரெட்ணம்பிள்ளை
கிருஸ்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# காலவோட்டத்தின் கண்ணீர்த்துளிகள் பிரசவித்த கல்வி எனும் தீப்பிழம்பு

முப்பத்துநான்கு வருட இல்லற பந்தம். இருவரும் எதிர்கால சந்ததியினருக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே வாழ்ந்திருந்தனர். காலம் வேகமாக கடந்து சென்றது. கால ஓட்டத்தில் 1917ம் ஆண்டு திரு. சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை அவர்கள் இவ்வுலகை நீத்தார். கணவரின் நினைவுகளைத் தன் உடலில் உயிரோட்டமென வாழத்தொடங்கினார் அன்னை. ஐயா அவர்களின் பிரிவுத்துயர் தன்னை ஆக்கிரமித்திட அனுமதியளிக்கவில்லை. கணவன், மனைவி என்ற பந்தத்திற்கப்பால் வாரிசற்ற தாம் எனக்கு நீ குழந்தை உனக்கு நான் குழந்தை எனும் பெரும் அன்பின் பிணைப்பால் இணைந்திருந்த உயிர்கள். மெய்க் காதலின் அடையாளங்களாய் வாழ்ந்த மனமொத்த தம்பதியினர். இமைப்பொழுதும் தன் கணவரின் நினைவுகளிலிருந்து விலக முடியவில்லை, தன் கணவர் தன்னுடன் வாழ்வதாகவே எண்ணம் கொண்டார். நினைவுகளின் தாக்கம் தன் கணவரின் எண்ணங்கள் உயிர் பெற வேண்டும் என்ற அவாவினை ஏற்படுத்தத் துவங்கியது.

தன் கணவரின் நிலையிலிருந்து அவர் முன்னெடுத்துச் செய்து வந்த எந்தவொரு செயற்பாடுகளும் தடைப்பட்டுவிடாது முன்னெடுத்துச் செல்லத் தொடங்கினார். ஐயா செய்துவந்த தொண்டுகளுடன் சேர்த்து ஐயாவின் பெயரால் மேலும் பல தொண்டுகள் ஆரம்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஐம்பத்துநான்கு வயதில் கணவனை இழந்து கைம்பெண்ணான அன்னையார் அக்கால கட்டுப்பாட்டு நெருப்பு வளையங்களிலிருந்து மாபெரும் சவால்களின் மத்தியிலேயே தம் சமூக சேவைகளைத் தொடர்ந்தார். தனக்கென பெண் வாரிசு ஒன்று இல்லாதிருந்த போதும் தன் உறவினர்களின் பிள்ளைகளுக்கு வளர்ப்புத் தாயாக இருந்து நல்வழி காட்டியிருந்தார்.

கல்வி ஒன்றின் மூலமே பெண்பிள்ளைகள் தம்மைக் காத்துக் கொள்ள முடியும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். கல்வியின் கருவிலே பெண் சக்தியின் பூரண வலிமை கொண்டு புதுமைப் பெண்களுக்கான உலகைப் படைத்தார்.



ஸ்ரீமான்
சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

# ஸ்ரீ சண்முக வித்தியாலயம் தாபிதமும் – நிர்வகிப்பும்

தன் கணவர் மீது தனக்கிருந்த அன்பு, பாசம், காதல், பக்தி, மரியாதை இவற்றையும் தாண்டி ஐயா அவர்களின் குணமும், தர்ம சிந்தனையும், அவர் போன்ற ஓர் வள்ளலின் பெருமையை இவ்வுலகம் மறந்து விடக் கூடாதென்கின்ற ஆதங்கத்தினாலும் 1923ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ந் திகதி 16 மாணவிகளுடனும், திரு. சு.கைலாசப்பிள்ளை, திருமதி கைலாசப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினரை ஆசிரியர்களாகவும் கொண்டு ஸ்ரீ சண்முக வித்தியாலயம் எனும் பெயரில் பெண்களுக்கான பாடசாலையை உருவாக்கினார் அன்னை திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள்.

ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் பாடங்களைக் கற்பிப்பதற்கு திருமலையில் ஆசிரியர்களை பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை அப்போது இருக்கவில்லை. பொதுவாக ஆண்கள் பாடசாலைகளிலும் இந்நிலையே காணப்பட்டது.

ஆசிரியர்கள் இந்தியாவிலிருந்தே வரவழைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது. பாடசாலை ஆரம்பிக்கும் ஏற்பாடுகளில் கூட அத்தனை சிரமங்கள் இருந்துவிடாத போதும் கல்வி கற்பதற்கு மாணவிகளை அனுப்புமாறு வீடு வீடாகக் குதிரை வண்டியில் சென்று கெஞ்சிக்கேட்கும் அவலநிலை, பெண் கல்வியின் சாபமான அக்கால கட்டத்தில் போராட்டத்துடனேயே அவரின் கல்விச்சேவை ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் நிர்வாகம் மிகவும் நேர்த்தியான முறையில் ஆரம்பிக்கப்பட்டு கொண்டு நடாத்தப்பட்டது. எத்தகைய சவால்கள் எழுந்த போதிலும் அன்னை சோர்ந்து போய் விடவில்லை. பாடசாலைக்கான கட்டிடங்கள், தளபாடங்கள், ஆசிரியர்களுக்கான சம்பளம், நிர்வாகச் செலவுகள், ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் என தனது சொத்துக்களை தன்நலம் கருதாது செலவு செய்தார்.

கற்றலுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளுமே சிறந்த வழிகாட்டலின் கீழ் மிகச் சிறப்பாக இயங்கியது. பாடசாலையின் முன்னேற்றம் மிக வேகமாக இடம்பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலமென்பதால் ஆங்கிலம் அனைத்து இடங்களிலும் அவசியமான மொழியாய் புகுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக 1926ம் ஆண்டு பாடசாலையில் ஆங்கில




பாடசாலயின் ஆரம்பகால முகப்புத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மூலமான கல்விச் செயற்பாடுகள் உள்வாங்கப்பட்டன. ஆங்கில மொழி மூலமான கல்விச் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கென தனியொரு நிர்வாகம் கட்டமைக்கப் பட்டிருந்தது. பிரத்தியேகமான அதிபர், ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். மேலும் ஆசிரியர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இந்துக்கள் மட்டுமே கல்வி கற்று வந்த பாடசாலையில் ஏனைய மதத்தைச் சேர்ந்த செல்வந்தர்களும் தமது பெண்பிள்ளைகளை கல்வி கற்க அனுமதிக்குமாறு அன்னையை நாடினர். காலைக்கூட்ட இறை வழிபாடுகளின் போது, இந்துக்களுக்கான சமய வழிபாடு,இஸ்லாமியருக்கான வழிபாடு,கிறிஸ்தவருக்கான வழிபாடு,பௌத்தர்களுக்கான வழிபாடு என அனைத்து மதத்தினருக்கும் அவரவர் சமயப் பிரார்த்தனைகளுக்கான சுதந்திரத்தை அன்னை வழங்கியிருந்தார். எந்தவொரு தனி மனிதரதும் உரிமையையும் மதிக்கும் பண்பு கொண்டவரான அன்னையார், நான்கு இன மக்களும் மதித்து தலை வணங்கிய பெருமைக்குரிய பெண்மணி என்ற பெருமைக்குரியவராக வாழ்ந்தார்.

அன்னையார் திண்ணைப் பள்ளியில் ஆண்டு மூன்று வரை மட்டுமே படித்திருந்தாலும் தன் கண்டிப்பான நிர்வாகத் திறமையாலும், அன்பினாலும் அனைவரையும் கட்டுக் கோப்பான நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு நடாத்திடும் திறனுடையவர். அன்னையை "மனேஜர் லேடி" என்று எல்லோரும் பயத்தோடும் மரியாதையோடும் அழைப்பர்.

பெண் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட சண்முக வித்தியாலயத்தில் ஆண்டு மூன்று வரை ஆண்பிள்ளைகளுக்கும் கல்வி கற்க அன்னை அனுமதி அளித்திருந்தார்.

கல்விச் செயற்பாடுகள் வேகமாகவே முன்னேறின. இருப்பினும் போக்குவரத்தின் நிமித்தம் பெண்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கிய சவால்களும், சமூகக் கட்டுக்கோப்புக்களும் மாணவிகளின் கல்வியைப் பாதித்திடாது அவர்களைப் பாதுகாத்து தரமான கல்வியை அவர்களுக்கு வழங்கு-வதற்காக மாணவியர் விடுதியொன்றை 1932ம் ஆண்டு அமைத்துக் கொடுத்திருந்தார்.

பின்னர் ஏற்பட்ட இரண்டாம் உலக யுத்தத்தினால் அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் இப் பாடசாலை சிறிது காலம் வைத்திய சேவைகளுக்காக உபயோகப்படுத்தப் பட்டிருந்தது. யுத்தத்தின் பின் நாட்டில் அமைதி நிலவியதும் பாடசாலை மீண்டும் இயங்கத் துவங்கியது.

தனது பாடசாலையில் கல்வி கற்று சித்தி பெற்ற மாணவியர் -களுக்கு தன் பாடசாலையிலேயே ஆசிரியர் நியமனம் வழங்கும் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன. பெரும் முற்போக்குச் சிந்தனையாளரான அன்னை கல்வியால் மட்டும் சிறந்த அடைவு மட்டங்களை அடைய முடியாத மாணவர்களின் எதிர்காலமும் ஒளி பெற வேண்டும் என்ற நோக்கில் கைத்தொழிற் பயிற்சிகளையும் பாடசாலை வளாகத்திலேயே ஆரம்பித்து வைத்தார். தந்தல், தையல், ரேந்தை,கம்பளி பின்னுதல், நெசவு போன்ற கைத்தொழிற் பயிற்சிகள் மிக நேர்த்தியாக பயிற்றுவிக்கப்பட்டன.

அன்னையின் தர்ம சிந்தனையும், சமூக நலன்களில் அவர் கொண்ட அக்கறையும் எல்லையற்ற விஸ்தீரணத்தைக் கொண்டமைந்திருந்தன. இதற்கு ஆதாரபூர்வமான ஓர் சிறப்பம்சம் கன்னியா அந்தியேட்டி மடம். இராவண மன்னன் இறந்த தன் தாயாரின் 31வது நாள் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்வதற்காக உருவாக்கிய கன்னியா வெந்நீரூற்றுக்கள் அமைந்த எம் தமிழினத்தின் அடையாளமான பகுதியில் எம் இந்து மக்கள் தம் முன்னோர்களின் அந்தியேட்டி கிரியைகளை சௌகர்யமாக செய்து முடிப்பதற்கு ஐயா சண்முகம்பிள்ளை அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடம் ஒன்று நிர்மாணித்து வழங்கப்பட்டது.
இம் மடத்தினை ஐயாவின் மறைவிற்குப் பின் "சண்முக நம்பிக்கை நிறுவனம்" என்ற பெயரில் அன்னையார் பொறுப்பேற்று வழி நடத்தலானார். அந்த நாட்களில் திருகோணமலையைச் சேர்ந்தவர்களும் அதனை அண்மித்த கிராமங்களில் வசித்த இந்துக்களும் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்வதற்கு முதல் நாளே தேவையான பொருட்களுடன் கன்னியா அந்தியேட்டி மடத்திற்கு வந்து தங்கி கிரியைகளுக்குரிய ஏற்பாடுகளைக் கவனிப்பதுடன் அந்தியேட்டி அன்னதானத்திற்குரிய சமையல் வேலைகளை - யும் இரவோடு இரவாக முடித்து மறுநாள் காலையிலேயே திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலய சைவக் குருக்களை அழைத்து வந்து அந்தியேட்டி கிரியைகளை சிரமமின்றிப் பூர்த்தி செய்து கன்னியா கிராமவாசிகளை அழைத்து வந்து அன்னதானம் வழங்கி பூரண மனத்திருப்தியுடன் திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள் தனக்குப் பின் தனது சொத்துக்களை தர்ம நெறிகளில் பராமரிக்கும் பொருட்டு தனது கணவர் வழி உறவில் பெறாமகனும் சுவீகார புத்திரனுமாகிய திரு.நா.கிருஸ்ணதாசன்(நீதிபதி) அவர்களை தர்மகத்தாவாக நியமித்து தாம் ஆரம்பித்த ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தை திருகோணமலை இந்து மக்களின் பொதுத்தாபனமாக 1949ம் ஆண்டு தர்ம சாசனம் முடித்து வைத்தார். அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களால் தமது சொத்துக்களைக் கொண்டு சாசனம் செய்யப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுடன் கன்னியா அந்தியேட்டி மடத்தினையும் மிகச் சிறப்பாக நிர்வகித்திருந்தார். இம் மடத்தின் நிர்வாகத்தில் திருகோணமலையைச் சேர்ந்த சில முக்கிய பிரமுகர்களை நியமித்திருந்தார். அன்னையாரால் எழுதப்பட்ட சண்முகா நம்பிக்கை நிறுவனத்தின் உயிலுக்கமைவாக கன்னியா வெந்நீரூற்று மடத்தினைப் பராமரிக்கவும், நிர்வகிக்கவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான வருவாயைப் பெற்றுக்கொள்வதற்கென மூதூர் பிரதேசத்தில் கட்டைபறிச்சான் பூமாலை வெட்டை பகுதியில் 27 ஏக்கர் வயற்காணிகளில் இருந்து பெறப்பட்ட வருவாயின் ஒரு பகுதி உபயோகிக்கப்பட்டது. அன்னையின் காலத்திற்குப் பின்னர் உள்நாட்டு யுத்த சூழலில் மிக மோசமான நிலையில் காட்சியளித்த இம் மடத்தின் கட்டிடத்தை 1983 வரை இடிபாடுகளுடன் காணக்கிடைத்தது.காலப்போக்கில் இம்மடம் கவனிப்பாறற்று பாழடைந்து சில வருடங்களுக்கு முன்னர் இருந்த சுவடே தெரியாமல் புள்டோசரால் தரைமட்டமாக்கி அழிக்கப்பட்டுவிட்டது.

அன்னை ஆற்றிய சமயத்தொண்டுகளின் தொடர்ச்சியாக திருமலை ஆலடி விநாயகர் ஆலயத்திற்கு ஏறத்தாழ 15 பவுன் பெறுமதியில் தனித் தங்கத்தினாலான கிரீடம் ஒன்றையும்



ஆலடிவிநாயகர் கோவிலில்
உள்ள தங்கக் கிரீடத்தின்
இரு வேறு தோற்றங்கள்
(படப்பிடிப்பு 02.07.2017)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தருவித்திருந்தார்.
1923ம் ஆண்டு சண்முக வித்தியாலயம் ஆரம்பித்த நாள் முதல் தன் இறுதிக்காலம் வரை பாடசாலையின் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் அன்னையின் நிர்வகிப்பு உள்ளடங்கி யிருந்தது.

உடல் நலம் சீராக இருந்த காலம்வரை பாடசாலையில் இடம்பெறும் கலை விழாக்கள், வாணி விழா போன்ற விழாக்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஒருபோதும் தட்டிக்கழித்ததில்லை. வருடத்திற்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படும் கலை விழாவிற்கு அன்னையின் மேற்பார்வை-யிலேயே நிகழ்ச்சிகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன. கலைவிழாக்களுக்கென குறிக்கப்படும் தினத்திற்கு முன்னையதினம் மேடையேற்றப்பட வேண்டிய ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்குமான ஒத்திகைகளும் அனுமதியும் அன்னையின் இறுதியான அனுமதியின் பின்னரே உறுதி செய்யப்படும்.

எத்தனை பொறுப்புக்களை தான் நிர்வகித்த போதும் சண்முக வித்தியாலயத்திற்காக அவர் நேரத்தையும், செல்வங்களையும் செலவிட தாமதித்ததில்லை. அத்தனை உறுதியானதொரு கோட்பாடுடனேயே பாடசாலையை தாபித்து இயக்கி வந்தார்.வெள்ளை நிற சேலை கட்டி கலைவாணியின் பிரதி பிம்பமாய் பாடசாலையை ஒளிர வைத்தார்.

அன்னையின் தனித்துவமான பழக்கவழக்கங்களை அன்னை -யின் காலத்தில் சிறார்களாய் வாழ்ந்து இன்று சிகரமாய் தம் வாழ்வை வெற்றி கொண்டு கலாபூஷணம் விருதுகளோடு அன்னை தங்கம்மாவின் பெருமையை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டும் மகள்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களிடம் கேட்டறிகையில் மெய் சிலிர்த்துப் போகும்.

இக்கால விளம்பரங்களில் கிருமிகளின் தாக்கமும், நோய் -களிற்கான பாதுகாப்பும் பணம் சம்பாதிக்கும் நோக்கில் நகைச்சுவையாய் ஒளிபரப்பப்படுவதையே பார்த்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கெல்லாம் அன்னை கடைப்பிடித்த அன்றாட பழக்க-வழக்கங்கள் அனைத்துமே பிரம்மிப்பானவைதான்.

நாற்சார் வீடுகளிலே வீட்டு வாசல்களில் நீர் வைத்திருந்து வெளியே சென்று வீட்டிற்குள் வரும் முன் கால்களைக் கழுவுவது அக்கால மக்களின் பொதுவான பழக்கம்.

தன்னைச் சூழ்ந்திருந்த உறவினர்களின் பிள்ளைகளை தான் பெற்ற பிள்ளைகள் போலவே வளர்த்திருந்தார். அவர்களின் பழக்கவழக்கங்கள், ஆரோக்கியம், சுத்தம், சுகாதாரம், பண்பாடு போன்றவற்றில் மிகவும் கண்டிப்புடனான பராமரிப்பைச் செய்து வந்தார்.

அவரின் வளர்ப்பின் சிறப்புக்கள் பிற்காலத்தில் அன்னை உடல் நலம் குன்றியிருந்த இறுதிக் காலங்களில் அவர் கடைப்பிடித்து வந்த வாழ்க்கைமுறைகள், அன்றாட நட-வடிக்கைகள் எதுவம் மாறிடாது தொடர்ந்திட ஏதுவாய் அமைந்தன.

வெள்ளை நிற சேலை கட்டி சாய்வான வசதி இருக்கையிலே அன்னை கம்பீரமாக அமர்ந்திருக்கும் தோரணை ஓர் தனியழகாம்.

அன்னையின் வீட்டின் பின்புறம் இருந்து பார்த்தால் திருக்கோணேஸ்வரம் ஆலய கோபுர தரிசனம் நன்கு தெரியும். தினமும் நேரம் தவறாமல் கோணேசப்பெருமானை வீட்டிலிருந்தே வழிபடுவார்.

கோணேசர் பூமியில் அனைத்தும் கோணேசருக்கே பொறுதி என்ற வாசகத்தை கூறிக்கொள்வது அன்னையின் வழக்கம்.

வீட்டு வாசலின் திண்ணையில் தாகசாந்திக்காக குடத்தில் நீர் வைக்கும் வழக்கத்திற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருந்தார். தினமும் புழக்கத்திற்கு பயன்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தின் மீதி நாணயங்களைக் கூட அழகிய மரப் பெட்டி ஒன்றில் சேமித்து வைத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அந்த சிறு சேமிப்பைக் கூட தானம் செய்திடும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அன்னையின் வீட்டில் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் பாத்திரங்களைக் கையாள்-வதற்கே ஆண்களில் நால்வரேனும் வேண்டும். தினமும் அன்னையை நம்பியே பல குடும்பங்களுக்கு மூன்று வேளையும் வயிறு காத்திருந்தது. பசித்தோருக்கு உணவளி-ப்பதில் அன்னை அன்னபூரணி.

கணவரோடு சுமங்கலியாக வாழ்ந்த காலத்திலும் சரி, தனியே ஒரு கைம்பெண்ணாக வாழ்ந்த காலத்தில்தானுமோ பல பெண்களுக்குத் தன் சொந்த செலவிலேயே திருமணம் செய்வித்து,அவர்களின் வாழ்வாதாரங்களுக்கும் வழி செய்து கொடுத்தார். இருண்டு கிடந்த எத்தனையோ கன்னிப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்த அஷ்ட லக்ஷ்மி அன்னை தங்கம்மா. வீட்டிலிருந்த படியே பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை பாடசாலைக்குச் சென்று வரும் தன்னோடு இருந்த உறவினர்களின் பிள்ளைகளிடம் கேட்டறிந்து கொள்வார். கல்வி கற்பிக்கப்படும் முறைகள் மாணவர்களுக்குப் பயனளிக்கும் விதமாய் உள்ளதா? கற்ப்பிக்கப்படும் பாடங்களை மாணவர்கள் புரிந்து கொள்கிறா-ர்களா? என்பதனை அவர்களிடத்தில் அன்றாடம் படித்த பாடங்களை வீட்டில் மீண்டும் படிக்க வைத்துத் தெரிந்து கொள்வார்.

தாய்மை என்பது ஒரு குழந்தையைப் பிரசவித்து அக் குழந்தையை பேணி வளர்ப்பதால் மட்டும் உணரப்படும் உணர்வு இல்லை, தாய்மையின் உன்னத உணர்வை தன் சேவையில் உலகிற்குக் காட்டிய அன்னை தெரேசா அம்மையார் போன்ற பெண் குலப் பொக்கிஷங்கள் எமக்கு உணர்த்தியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

**ஹம்ஸகமனாம்பிகாதேவி சமேத ஆதிகோணநாயகர் மடியினில் மலர்ந்து**
**ஸ்ரீ மாதுமை உடனுறை திருக்கோணேஸ்வரர் திருவடியினில் உதிர்ந்த**

# சுவர்ண மலர்



**உ**லகளாவிய ரீதியில் சாதனை படைத்த பல பெண் சாதனையாளர்கள் காலத்திற்கு முன்பே தன் சேவையால் பெண் கல்வியை ஒளி பெறச் செய்த ஓர் சிறந்த தாய்மையின் கருணையால் தாபிக்கப்பட்ட பாடசாலையின் மாணவியர் நாம் ஒவ்வொருவரும் அன்னையின் பிள்ளைகள் என பெருமிதம் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது ஆண்டுகள் வரை பாடசாலையை தன்னால் முடிந்தவரை வளர்ச்சிப் படிக்கட்டுக்களில் மேல் நோக்கி முன்னேறச் செய்தார்.

ஓர் தூய ஆன்மாவினால், புனிதமான நோக்கத்திற்காக, உயர்வான குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட உன்னதமான கல்விக் கூடத்தில் அந்தக் கலைவாணியின் கடாட்க்ஷம் மகிழ்வுடன் கொழிக்கின்றது. வாழ்நாளில் பெரும் பகுதியைத் தன் சமூகத்தின் நலனுக்காகவே அர்ப்பணித்து, இறைபணியே என் மூச்சு என வாழ்ந்து தன் பிறவிப்பயனை வாழும் போதே தொட்டு விட்ட நிலையில் 1953ம் ஆண்டு வைகாசி மாதம் 02ந் திகதி தனது தொன்னூறாவது வயதில் இயற்கை மூப்பினால் இவ்வுலகை நீத்தார்.

கோணேசர் பூமியில் அனைத்தும் கோணேசருக்கே பொறுதி என்றே வாழ்ந்த புண்ணிய ஆத்மா கோணேசரிடமே ஐக்கியமானது.

அன்னையின் இறுதிச் சடங்கு சண்முகம்பிள்ளை ஐயாவின் சகோதரர் சுவாமிநாதன்பிள்ளை அவர்களின் மகன் திரு.சுந்தரலிங்கம்பிள்ளை அவர்களினால் நிறைவேற்றப்-பட்டது. மரணம் வரை அல்ல மரணத்தின் பின்னும் தனக்கான செயற்பாடுகளை முன்கூட்டியே ஒழுங்கு செய்து வைத்திருந்த மன உறுதி கொண்ட இரும்புப் பெண்மணி அன்னை.

திருகோணமலையில் எத்தனை அளப்பரிய சேவைகளையும், தொண்டுகளையும் அம்மையார் ஆற்றியிருந்த போதும் அன்னையின் சிறப்பினைப் பறைசாற்றும், அவர் பெருமையை உரக்கச் சொல்லும் அடையாளமாய் அன்னை தாபித்த "ஸ்ரீ சண்முக வித்தியாலயம்" என்றும் அவர் பெருமை சொல்லும் கம்பீர உருவச்சிலையைத் தாங்கி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949ல் "சண்முகா நம்பிக்கை நிறுவன" தர்மகத்தாவாக நியமிக்கப்பட்ட அன்னையின் பெறாமகனும் ஓய்வு பெற்ற நீதியரசருமான திரு.நா.கிருஸ்ணதாசன் ஐயா அவர்களின் தலைமையில் 1953-1961 வரை அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்கும் வரை நிர்வகிக்கப்பட்டு வந்தது. இக்காலப் பகுதியில் திரு.நா.கிருஸ்ணதாசன், திருமதி.கி.கமலாம்பிகை, திரு.பொ.நடராஜா, திரு.முருகுப்பிள்ளை ஆகியோரின் நிர்வகிப்புக்களின் கீழ் பாடசாலை இயங்கிவந்தது.

திரு.பொன்னையா நடராஜா அவர்கள் திரு.நா.கிருஸ்ணதாசன் அவர்களின் நெருங்கிய நண்பராவார். இவருடைய சேவைக்-காலப் பகுதியில் பாடசாலையில் மிகவும் சிறப்பான நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்தினார். அவரது கால நேரம் பாராமல் உழைக்கும் பண்பு பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. மிகவும் கம்பீரமாக உடையணிந்து உரிய நேரத்திற்கு முன்னரே பாடசாலைக்கு வருகை தந்து தன் பணிகளை செவ்வனே செய்து முடிப்பார். பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னரும் வீட்டிற்குச் செல்லாது பாடசாலையின் நிர்வாகத்தின் சிந்தனையையே முழுவதுமாகக் கொண்டிருப்பார். இவருடைய கட்டுப்பாட்டில் பாடசாலையின் நிர்வாகம் இருந்த காலத்தில் பாடசாலையின் வளர்ச்சி விஸ்வரூபமாய் வியாபித்திருந்தது.


திரு. பொன்னையா நடராஜா

ஸ்ரீ சண்முக வித்தியாலத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பெருமைக்குரியவர் திரு.பொன்னையா நடராஜா ஐயா அவர்கள். அன்னையின் காலத்திற்குப் பின்னர் அன்னையின் ஆசையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வசதியற்ற மாணவர்களுக்கென இல்லம் ஒன்றை உருவாக்கி, பராமரித்து வந்தார்.

அன்னையின் கனவாகவே இருந்த "திருகோணமலை மாவட்டத்தின் கிராமப்புறங்களில் வசித்த வசதியற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கும் பொருட்டும், அவர்களுக்கான உணவு,உடை,உறையுள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும் விடுதி வசதிகளை விஸ்தரிக்கும்" நிமித்தமும் ஸ்ரீ சண்முக தர்ம தாபனத்தினால் பின்வரும் இல்லங்கள் நடாத்தப்பட்டு வந்தன.

01.ஸ்ரீ சண்முக மகளிர் இல்லம் - வித்தியாலயம் வீதி, திருகோணமலை.

02.ஸ்ரீ சண்முக மகளிர் இல்லம் - ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.

03.ஸ்ரீ சண்முக ஆண் பிள்ளைகள் இல்லம்-கண்டிவீதி, திருகோணமலை.

இவற்றில் வித்தியாலயம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சண்முக மகளிர் இல்லம் 1957ம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது.

திரு.நா.கிருஸ்ணதாசன் ஐயா அவர்கள் சண்முக தர்ம தாபனத்தின் பணிகளுடன் திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். தன் நண்பர்கள் மற்றும் சில பிரமுகர்களின் ஆதரவுடன் திருகோணமலை உட்துறைமுக வீதியில் ஒரு கல்விக் கலாசார மண்டபமும் கட்டுவித்தார். அன்னையின் ஆலயப்பணிகளின் தொடர்ச்சியாக மாத்தறை மாவட்டத்தில் கதிர்காம யாத்திரிகர்கள் தங்கிச் செல்வதற்கான மடமும் கட்டிக் கொடுத்தார். வன்செயலில் பல முறை மடம் சேதமாக்கப்பட்ட போதும் சோர்ந்துவிடாமல் மீண்டும் மீண்டும் புதுப்பித்து வழங்கியிருந்தார். பின் ஆலயம் ஒன்றைக் கட்டுவித்து இந்தியாவிலிருந்து முருகன் சிலையினையும் வரவழைத்துப் பிரதிஷ்டை செய்து கொடுத்தார்.

திரு.சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை அவர்களும் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களும் எதிர்பார்த்தபடியே அவரிடம் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களையும், பணம், பொருள், தனது பொன்னான நேரம் என அனைத்தையும் மக்களுக்காகவே பயன்படுத்தி ஆத்ம திருப்தி அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் தமது பொறுப்புக்களை சேவை மனப்பான்மை உடையவர்களைத் தெரிவு செய்து அவர்களிடம் ஒப்படைத்தார். அவர்காலத்தின் பின்னர் அவர் மகன் திரு.கிருஸ்ணதாசன் விசாகன் உட்பட எட்டு உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகத்தினரால் ஸ்ரீ சண்முக தர்ம தாபனம் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டது. அன்னையால் சாசனம் எழுதிக் கொடுக்கப்பட்ட மூதூர் தேர்தல் தொகுதியில் கட்டைபறிச்சான், பூமாலைவெட்டை பகுதிகளில் ஸ்ரீசண்முக தர்ம தாபனத்திற்குச் சொந்தமான 27 ஏக்கர் வயற்காணிகள் இருந்தன. அக்கால கட்டத்தில் நாட்டில் நிலவிய பாதகமான சூழலில் அதை மீட்பதற்கான நடவடிக்கைகள் முடக்கப்பட்டிருந்தன. தற்போது இதன் நிலை குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

"எய்தற்கு அரியது இயைந்தைக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்"

எனும் பொய்யாமொழிப் புலவரின் குறளுக்கேற்ப செயற்கரிய செயலைச்சாதித்து இமயமென உயர்ந்து நின்ற பெண்மணி. இதனால், 1923ம் ஆண்டு கிழக்கிலங்ழகை இந்துப் பெண்கள் கல்விக்கான முதற்பக்கத்தில் ஸ்ரீ சண்முக வித்தியாலயம் என்ற பெயரில் இந்நிறுவனம் பொன்னேட்டைப் பொறித்துக் கொண்டது. அகவை தொண்ணூற்றிநான்கை எட்டிய இந்நிறுவனம் இன்று திட்டமிட்டு அமைக்கப்பட்ட உயர்ந்த கட்டடங்களுடன் கோணேஸ்வரப் பெருமான் அருள் பாலிக்கும் திருமலை நகரில் தனக்கே உரித்தான மிடுக்குடன் உயர்ந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சிப்படிக்கட்டுகள்

<u>கல்லூரி தாபிதம்</u>

"கற்றலே பெண்கள் உயர்வுக்கு ஒரே வழி" எனும் கொள்கையை இறுகப்பற்றி அதற்காக ஒரு கல்லூரியை அமைத்தே தீருவது எனும் உயரிய இலக்கினைக் கொண்டு அமரர் திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட அறப்பணியானது இன்று காலத்தினை வென்று நிற்கின்றது. மண்ணாசை, பணஆசை, பொருளாசை என்று மாய உலகில் மனிதன் சஞ்சரிக்கும் இன்றைய கால கட்டத்தில் தனது சொந்த நிலத்தில் திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயம் என்ற பெயரில் 1923.10.20 திகதியில் இந்நிறுவனத்தினை அம்மையார் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

1961ல் அரசினரால் பொறுப்பேற்கப்படும் வரை இப்பாடசாலை தனியார் பாடசாலையாகவே இயங்கிவந்தது. இதனால் பாடசாலையின் நடைமுறைத் தேவைகள்,மற்றும் கட்டுமான வேலைகட்கெல்லாம் தனது சொந்தச் சொத்துக்களை விற்பனை செய்தே பாடசாலையை நடாத்தியதாக பதிவேடு-களில் இருந்தும் அம்மையாரின் உறவினர்களின் தகவல்களில் இருந்தும் அறியக்கூடியதாகவுள்ளது. இப்பெரும் யாகத்தில் தனது சொத்துக்களை ஆகுதியாக்கி இக்கல்லூரியை ஆரம்பித்து வளர்த்தெடுத்து மக்கள் மத்தியில் என்றும் மங்காத் திடம் கொண்ட தியாகச் செம்மல் அமரர் திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படுத்துவதுடன் சூக்கும வடிவிலான அன்னாரின் ஆசி வேண்டி எம்பணிகளைத் தொடர்வது சாலப் பொருத்தமானதாகும்.



1926



1983

<u>கல்லூரி வளர்ச்சி</u>

இரு ஆசிரியர்களுடனும் பதினாறு மாணவிகளுடனும் 1923ல் பிறந்த இந் நிறுவனம் இன்று கல்விப்பணியிலும், இதர இணைப்பாடச் செயற்பாடுகளிலும் அகலக் கால் வைத்து 2008ம் ஆண்டில் 85 ஆசிரியர்களையும் 2130 மாணவிகளையும் கொண்டு உயர்ந்து ஓங்கி நின்றது. இன்று 2017ம் ஆண்டில் 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களையும் 2534 மாணவிகளையும் கொண்டு விஸ்வரூப வளர்ச்சியுடன் வியாபித்து நிற்கின்றது. இதனது வளர்ச்சியில் பங்கெடுத்த, இன்னமும் பங்கேற்கின்ற அனைவரும் பூசிக்கப்படவேண்டியவர்கள். இப் பாடசாலை-யின் வளர்ச்சிக்கட்டத்தினை சிறிது நோக்குவோமானால் ஆரம்பத்தில் இரு மொழிப் பாடசாலையாக விளங்கிய இப் பாடசாலை 1962ல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது, 1992ல் கல்லூரி அந்தஸ்த்தினைப் பெற்றுக்கொண்டது. 1996ம் ஆண்டு தேசிய பாடசாலை ஆக்கப்பட்டது. இக்கல்லூரியின் விசாலமான வளர்ச்சியில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் அனைவரும் பெருமைப்- படுத்தப்பட வேண்டியவர்கள். காலத்திற்குக் காலம் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் என்போருடன் இவர்களது செயற்பாடுகளை வழிநடாத்தி வளரச்செய்ததில் கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணை-க்களம், வலயக்கல்வி அலுவலகம் என்பனவும் நிச்சயமாகத் தொடர்ந்தும் பங்கேற்கின்றனர். இப் பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், மற்றும் பெற்றோர், நலன்விரும்பிகள் என அனைவரும் தங்களது பங்களிப்பினையும் நிறைவாகச் செய்துவருகின்றனர்.

## சண்முகாவின் முன்னைய அதிபர்கள்

இக்கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முக்கியமான சில அதிபர்கள் பற்றிய சில தரவுகள்...1923ல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல்வேறு அதிபர்கள் பணியாற்றிய போதும் இலங்கையைச் சேர்ந்த முதலாவது அதிபர் என்ற பெருமையை திருமதி.தங்கராஜா தங்கரத்தினம் பெறுகின்றார்.இவர் 1956-1966 வரை சேவை செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து செல்வி.இராசநாச்சியார் விஸ்வலிங்கம் கடமையாற்றினார். இவரது காலப்பகுதி 1966-1984ம் ஆண்டு வரை. 18 வருடங்கள் என்ற நீண்ட காலப் பகுதியில் கடமையாற்றிய அதிபர் என்பதுடன் மாவட்டத்தில் கல்லூரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சத்திற்கு கொண்டுவர அயராது உழைத்த ஒரு தியாகச் செம்மல். இவரது காலத்தில் கல்லூரியானது பல்வேறு துறைகளிலும் பரிணாம வளர்ச்சி நிலைகளைக் கண்டது.இக் கல்லூரியில் இருந்து முதலாவது மாணவியை உயர் கல்வி பெற பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமை அம்மையாரைச் சேரும். இவரது காலம் கல்லூரி வரலாற்றில் முக்கிய கால கட்டமாகும். அடுத்து திருமதி.இராஜேஸ்பரசிங்கம் அவர்களும், இவரின்பின் திறம்பட சேவைசெய்த செல்வி.தி.ஆறுமுகம், இவரின்பின் திருமதி.இராஜேஸ்வரி தனபாலசிங்கம் என அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்விடத்தில் நாம் முன்னால் அதிபர் அமரர். இராஜேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களை நினைவு கூருவதும், அவரக்காக பிரார்த்தனை செய்வதும் எம்முன்னே விரிந்து கிடக்கும் பணிகனில் ஒன்றாகும். கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அர்ப்பணிப்புடனும், பற்றுடனும் செயற்பட்ட அம்மையார் அவர்கள் புதிய கட்டிடத் திறப்புவிழாவின் போது பாடசாலை வளவினுள்ளேயே தன்னுயிரையீந்த தியாகியாக எம் வரலாற்றுப் பதிவேட்டில் தனது பெயரைப் பொறித்துக் கொண்டார்.

சண்முக வித்தியாலயத்தினை "A"தரத்திற்கு
உயர்த்துவதற்காக அர்ப்பணிப்புடன்
செயற்பட்டார். அதற்காகவே மாணவர்
விடுதியொன்றையும் கட்டுவித்தார். தன்னலம்
கருதாது பாடசாலைக்காகவே தொடர்ந்து
பதினெட்டு வருடங்கள் உழைத்து
பாடசாலைக்காகவே உயிர்நீத்த
தியாகச்செம்மல்
செல்வி. இராசநாச்சியார் விஸ்வலிங்கம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைய அதிபர்கள்

செல்வி.பவானி நாராயணன் *01.11.1926 - 10.01.1928*
செல்வி.அன்னம் பத்மன் *13.06.1928 - 01.05.1933*
திருமதி.பத்மாவதி கனகரட்ணம் *01.12.1933 - 20.06.1936*
செல்வி.சா.ப.ரைற்றஸ் *20.07.1936 - 10.10.1939*
திருமதி.இராமகிருஸ்ணா குஞ்சுனிப்பிள்ளை
*01.11.1939 - 30.01.1942*
செல்வி.செ.நாகரட்ணம் *1942 - 1943*
திருமதி.ர.தே.ராவ் *20.06.1943 - 30.06.1946*
திருமதி.அழகுமுத்து மயில்வாகனம்
*17.07.1946 - 31.12.1947*
செல்வி.ரோஸ் அன்னம்மா நவமணி
*31.12.1947 - 31.12.1948*
செல்வி.லீலாவதி வேதமாணிக்கம் *01.01.1949 - 18.01.1951*
செல்வி.இ. இராஜம்மாள் *01.02.1951 - 31.12.1951*
திருமதி.அன்னம் நைநான் *04.05.1952 - 31.12.1952*
திருமதி.ஹேசல் ரங்கநாதன் *01.01.1953 - 30.04.1955*
திருமதி.ரா.மணி *09.05.1955 - 30.06.1956*
திருமதி.தங்கரட்ணம்.தங்கராஜா
*01.07.1956 - 14.06.1966*
செல்வி.இராசநாச்சியார்விஸ்வலிங்கம்
*15.06.1966 - 04.01.1984*
திருமதி.நவமணி இராஜேஸ்பரசிங்கம் *05.11.1984 - 09.11.1986*
செல்வி.திலகவதி ஆறுமுகம் *10.11.1986 - 18.02.1992*
திருமதி.ச.தெய்வநாயகம் *19.02.1992 - 15.03.1992*
திருமதி.இராஜேஸ்வரி தனபாலசிங்கம்
*15.03.1992 - 05.07.1997*
திருமதி.சந்திரா பாலசுப்ரமணியம் *16.07.1997 - 16.12.2009*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1952.12.31 அன்று அதிபர் அன்னம் நைநான் அவர்களின் பிரியாவிடையின் போது அன்னையார் பங்குபற்றிய பாடசாலையின் இறுதி நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின் மகத்தான சேவைகள்

தனிமரம் தோப்பாகாது என்பதற்கமைய பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களிற்கான கல்வியினை முழுவதும் வழங்கிட அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களின் சேவை மிகவும் மகத்தானது.

இரு ஆசிரியர்களுடன் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் இன்று தொன்னூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையும், இடையறா உழைப்புமே இக்கல்லூரி சாதனைகள் பலவற்றினை நிலைநிறுத்தி தரமான வெளியீடுகளை வெளிக்காட்டுவதற்குக் காரணமாகும்.

## கல்வி சாரா ஊழியர்கள்

பாடசாலையின் கட்டுமானங்களைப் பாதுகாப்பதில் மனதார தமது ஒத்துழைப்பினை வழங்குவதில் கல்விசாரா ஊழியர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். அலுவலகக் கடமைகள், பாடசாலைச் சொத்துக்களைப் பராமரித்தல், மாணவர்களுக்கான பாதுகாப்பு என பல்வேறுபட்ட வழிகளிலும் கல்விசாரா ஊழியர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக பணியாற்றுகின்றனர்.

## பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள்

இலக்கை அடையும் வரை உழைமின் எனும் சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கிணங்கச் செயற்படும் எமது ஆசிரியர்களின் அர்பணிப்பு மிக்க செயற்பாடுகளினால் இக்கல்லூரி ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக மிகச் சிறந்த பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று வருவது எமது பாடசாலையின் வழமையானதொரு வெளியீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முதலிடம், க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் "A" சித்தி பெறும் மாணவர்களின் தொகையில் முதலிடம், க.பொ.த (உ/த) பரீட்சையிலும் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மருத்துவம், பொறியியல், வணிகம், கலைத்துறை என அனைத்துத் துறைகளிலும் பல்கலைக்-கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை என்று அனைத்துவிதமான பொதுப்பரீட்சைகளிலும் எம்மாணவிகளின் கல்விப் பெறுபேறுகள் மாவட்டத்தில் முதன்மை பெறச்செய்-கின்றன.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் "சண்முகா" மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் மற்றும் விளையாட்டுக்கள் என்பனவற்றில் மாணவிகள் பல்வேறு மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியிலான பல வெற்றிகளைப் பெற்று சாதனைகளை நிலை நிறுத்தி வருகின்றனர். சகல துறை-களிலும் எம் மாணவிகள் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்துவதனால் மருத்துவர்களாகவும், பொறியிய-ளாலர்களாகவும், ஆசிரியர்களாகவும், வங்கியியளாலர்களா கவும் மற்றும் பல்வேறு திணைக்களங்களிலும் உயர்பதவிகளில் அலங்கரித்துக் கொண்டிருப்பதனைப் பார்க்கும்போது எமது கல்லூரி தாபகரின் தூரநோக்கு எத்தனை விசாலமானது என்பதனைப் புரிந்து கொள்ள முடியும்.

## பாடசாலையின் உள்ளகச் சூழல்

தகவல் தொடர்பாடல் துறையின் வளர்ச்சியும், உலக மயமாக்கலும் இன்று வாழ்நாள் முழுவதுமான கல்விக்கான தேவைகளையும், வகுப்பறைக் கற்பித்தலின் தரத்தினையும் மாற்றியமைத்த பிரதான காரணிகளாகும். இந்தவகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வகுப்பறையில் ஆசிரியரின் பிரவேசம் புதிய முறையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவரின் வகிபாகமும் பெரிதும் மாற்றமடைந்துள்ளது.தற்கால மாற்றங்களுக்கேற்ப கவின் சூழலை வகுப்பறையிலும் வெளியிலும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். கற்றலை நிர்ணயிப்பதில் கற்றலுக்கான சூழல் என்பதும் மிக முக்கியமானது. ஏனெனில் மாணவர்களும் ஆசிரியர்களும் விரும்புமிடங்களாக பாடசாலைகள் மிளிர வேண்டும்.இதன் தாக்கம் மாணவர்களின் பெறுபேறுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளிலும் பிரதிபலிப்பதனை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

<u>பாடசாலை மட்ட வெளியீடுகள்</u>

அவசியமான பலவிடயப் பரப்புக்களைக் கருத்திற்கொண்டு சிறப்பான சஞ்சிகையை வெளியிடுவது இக்கல்லூரிக்கு ஒன்றும் புதிய விடயமல்ல.

1987ல் 75வது ஆண்டு சிறப்பு மலரையும் 80வது ஆண்டு நிறைவின் போது 80வது ஆண்டு நிறைவு மலரினையும் வெளியிட்டு வைத்திருந்தனர்.மேலும் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் கல்லூரி முத்திரை பதித்த "பரதலய" இசை நடன நிகழ்ச்சியின் போது "பரதலய" என்னும் கலை இலக்கியச் சஞ்சிகையினை கொழும்பில் வெளியிட்டனர். மேலும் "நுட்பம்" எனும் தொழிநுட்பதுறை சார்ந்த சஞ்சிகையை 2003ம் ஆண்டிலும், "அருள் அபயம்" எனும் இந்துக் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் சஞ்சிகையை 2003ம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது. கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையான "மகுடம்" 2007ல் வெளியிடப்பட்டது.

இது கல்விப் புலத்திலுள்ள பல்கலைக்கழக விரிவுரை-யாளர்கள், பேராசிரியர்கள், கவின்னலைக் கல்லூரி முதல்வர்கள் போன்றோரின் ஆக்கங்களைத் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றது. இதே அடியையொற்றி "மகுடம் -2" 2008ல் வெளியானது. பாடசாலையின் 85வது ஆண்டு நிறைவு சிறப்பு மலராக வெளியான மகுடம் பல்கலை அம்சங்கள் நிறைந்த பலராலும் விரும்பப்படும் உசாத்துணை நூலாகவும் பயன்படுத்தப்படுமளவுக்கு கல்விமான்களின் படைப்புக்களைக் கொண்டமைந்தது.

## இராமகிருஸ்ண மிஷனின் பங்களிப்புக்கள்

சமய கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் அதே வேளை, கல்வியினையும் பெரிதும் ஊக்குவிக்கும் ஒரு நிறுவனமாக விளங்கும் இராமகிருஷ்ண மிஷனின் பங்களிப்பினையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.. 2003ம் ஆண்டில் இடம்பெற்ற 'பரதலய' எனும் நிகழ்ச்சி பாடசாலை வரலாற்றில் முக்கியமானதொரு நிகழ்வாகும். பாடசாலையின் பௌதிக தேவையொன்றுக்காக நிர்வாகம் நிதிப் பற்றாக் - குறையில் இருந்த போது இதன் முன்னால் தலைவர் சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்களின் ஆலோசனைகளின்படி இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் முற்றிலும் எமது கல்லூரி மாணவிகளின் பங்களிப்புடன் எமது கல்லூரி ஆசிரியர்களின் நெறியாள்கையின் கீழ் 'பரதலய' எனும் நிகழ்ச்சி கொழும்பில் மேடையேறியது. இதன்போது நிர்வாகத்தினரால் கணக்கிடப்பட்டதைவிட அதிகமான நிதியினை பெற்றுக்கொள்ள முடிந்ததுடன் எம் மாணவியர் மிகவும் வெற்றிகரமாக அந்நிகழ்ச்சியை நடாத்தி திருமலைக்கு பெருமையோடு திரும்பினர். சுவாமி ஆத்மகானந்த மகராஜ் அவர்கள் இந் நிகழ்ச்சிக்கு மண்டபம் உட்பட அனைத்து வசதிகளையும் இலவசமாக வழங்கி பாடசாலை செயற்பாடுகளுக்கு ஊக்கமும் ஆதரவும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் முன்னால் அதிபர் அமரர் திருமதி. இராஜேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களின் காலப்பகுதியில் அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளையின் உருவச்சிலை உருவமைக்கப்பட்டதுடன் அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளையின் உருவப்படம் பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறையினுள்ளும் வணக்கத்திற்குரிய முறையில் மாணவர் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையும் இவ் வழிபாடு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பின்னர் 2003ம் ஆண்டு பாடசாலையின் 80ம் ஆண்டு நிறைவின் போது அதிபர் திருமதி.சந்திரா பாலசுப்ரமணியம் அவர்களின் ஏற்பாட்டினால் அன்னையின் முழு உருவச்சிலை உருவமைக்கப்பட்டு மிகச்சிறப்பாக திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வகுப்பினர் அன்னையின் சிலைக்கு பூமாலை அணிவித்து மரியாதை செலுத்தும் ஒழுங்குகள் செயற்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு வருடமும் அன்னையின் நினைவு தினத்தினை முன்னிட்டு போட்டிகள் வைக்கப்பட்டு மாணவர்களுக்கு அன்னையின் பெருமைகளும் தியாகச் சிந்தனைகளும் வலியுறுத்தப்படுகின்றன.

தினமும் நடைபெறும் காலைக்கூட்டத்திலும் அன்னையைப் பற்றிய சிந்தனைத்துளிகளும் இடம் வகிக்கின்றன.

அன்னையின் கனவு எம் பாடசாலை. அவர் மெய்ப்பித்த கனவினைச் சிறப்பித்து உயர்த்துவது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கோணேசர் பூமியில் அவனருளாலே அவன் தாழ் வணங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயும் ஒரு தாஜ்மகால்....

திருமதி. ஸ்ரீபதி சுந்தரராஜன். (B.Sc., PGDE, M. Ed.)
ஆசிரியை
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

திருமூலர் நாமமிட்ட சிவபூமி தன்னிலே
குணதிசையில் அமைந்து குன்றென விளங்கும்
பாடல் பெற்ற தலமது கொண்ட திருகோணமலையின்கண்
கோயிலினை விஞ்சும் மற்றொரு தாஜ்மகால் பாரீர்

எங்கே எங்கே அந்த தாஜ்மகால்
என்றே தொக்கும் உங்கள் வினாவிற்கு
பின்னால் அந்த விடை தெரியும்
பெண்ணின் பெருமையும் கூட வரும்

மெலிந்த கொடியது மெல்ல படர்ந்திடவே
பாரியின் தேரது கொழுகொம்பானது அன்று
நலிந்த பெண்ணிறிவு மெல்ல மிளிர்ந்திடவே
தங்கம்மாவின் தொண்டது தனியானது இன்றும்

ஆறடி நிலமே சொத்தென்று ஆயிருந்தும்
பஸ்பமாகி நீரில் கரைவோமென தெரிந்திருந்தும்
யாரும் சொத்தை ஈயாரென புரிந்தும்
ஈந்து விட்டாரே தங்கம்மா சொத்தனைத்தும் தம்பணிக்கு

வடக்கே பதியுடன் பயணித்த வேளை
பார்த்து மகிழ்ந்த இந்துப்பள்ளி போல்
கிழக்கேயும் ஒன்று உதிக்க வேண்டுமென
நெஞ்சில் கொண்டதை நிலையாக்கி நிற்கிறார்

பொருத்தமான இடமதை பலவிடம் தேடி
பொழுதுகள் பல வீணாக கழிந்திடினும்
தக்கதோர் இடமென மனதில் தொட்ட பின்னர்
தக்கவைத்தாரே தன்னினைவதை இன்று நிலைத்திருக்க

இந்துப்பள்ளி ஒன்று எடுப்பாக டிழுந்திடவே
நின்று உழைத்தவர் பலபேர் ஆயினும்
பெயர் பொறித்து மறைந்து போனவர்
கிருஷ்ணதாசன் ஐயா என்பதை ஊரறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923ம் ஆண்டினில் வித்தியாலயம் வீதியில்
ஓலையே கூரையாய் மாடமே கூடமாய்
எண்ணிரண்டு மாணவரே நன்மணிகளாய்
ஆசான் மூவருடன் ஆரம்பமானதே இப்பள்ளி

மாணவர் வரவு குறைகண்டு மனம் வெதும்பி
தன்பரி வண்டியனுப்பி பள்ளிக்கு வரவழைத்து
இருபாலாரும் அரிவரி பயின்றிட இடமளித்து
மும்மொழியும் கற்றிட தங்கம்மா வழி சமைத்தார்

தங்கம்மாவின் தனிச்சொத்தாம் சண்முகவித்தியாலயம்
வளர்ச்சிகள் பலப்பலவும் அடுக்கடுக்காய் கண்டது
அரசிற்கோ இது நன்றாய் தெரிந்தது
1961 இல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது

மின்னலாய் ஓராயிரம் நாட்கள் நகர்ந்தன
ஆமை வேகத்தில் ஆண்டுகள் பல உருண்டன
காலங்கள் பல மெல்ல கடந்தன
பெருமைகளோடு புகழும் பல குவிந்தன

சண்முகவித்தியாலயமென நாமம் கொண்ட பள்ளியது
சண்டுக இந்து மகளீர் கல்லூரியென உயரவே
சிறார்கள் ஈராயிரம் தாண்டி தன்னகம் கொள்ள
ஆசான்கள் எண்மரை அண்மிக்கும் தேசிய கல்லூரியானது

கணினி கரிக்குலம் நூலகம் எனயாவும்
கல்வியின் மேம்பாட்டை கட்டியம் கூற
கலைக்கூட்டங்களும் ஆய்வு கூடங்களும்
கச்சிமதமாய் அமையப்பெற்ற கல்லூரியினது

அதிபர் பல பேர் தம்பணி கடந்தகல
சிலரோ கட்டிடத்தில் பெயர் பொறிக்க
பவளவிழாக் காணும் பாக்கியம் பெற்று - இன்று
கல்லூரியில் நிலைத்து நிற்குமவர் சந்திரா பாலசுப்பிரமணியமே

என்ன இல்லை இக்கல்லூரியில் என்றே
பலரும் வியக்கும் வண்ணம் பாங்காய்
பசுந்தளிர் நடுவே பள்ளி வாசகம்
எடுப்பாய் தொரியும் அதிபர் அலுவலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி அதிபர்கள் என்ன பகுதித்தலைவர்கள் என்ன
ஆசிரியர்கள் என்ன கல்விசாரா ஊழியர்கள் என்ன
யாவராயினும் தரமது கண்டு பழு பல வழங்கி
வெற்றி காண்பவர் நம் அதிபர் என்றால் மிகையில்லை

கலையென்ன வர்த்தகமென்ன இணைப்பாடமென்ன
கணிதமென்ன விஞ்ஞானமென்ன விளையாட்டென்ன
அனைத்தும் இங்கே உத்தமமென்றே கல்லூரியின்
கணினிப்பதிவு காட்டி நிற்குதே பாரீர்

ஐக்கியம், புனிதம், ஆன்மீகம், கொண்டே
தரமும், வனப்பும், புகழும் ஓங்கவே
தங்கம்மா செய்த தார்மீகத் தொண்டது
சண்முகா எனும் தாஜ்மகாலை உயர்த்தியது

சண்முக இந்து மகளிர் கல்லூரி என்ற நாமமது
பதிபெயர் பொறித்து நிலைக்க வைத்ததனால்
இதுவம் இன்னொரு தாஜ்மகால் என்றே என்னுள்
பெண் பெருமை பொங்க மெய் சிலிர்க்கின்றேன்.

(மகுடம் 2007 - பக்கம் 16)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலத்தில் நீடுநீர் வாழ வாழி!

- கொட்டிய ஆரன் -

சதிர் ஆடம் கலை நயம்
உதிர் வாகு கனி வளம்
கதிர் ஆடி நிறை பொலிக்
குதிர் ஏறிக் குடி புகம்!

தாமம் அணிந்து வந்து தம்பல
காமத் தரணி கமன்று தந்தநல்
வாமத் திலக வைகறை ஒன்று
நாமம் கொண்டது தங்கம்மா என்று

ஏர் பிளந்த பூமி வாகி
நார் திளைத்த குடியு மாகி
சீர் படைத்த பெண்மை யாகி
கூர் நிகர்த்து வந்தனள்!

கண் ஓடம் கலந்து ஒப்பநம்
மண் பாடும் மாங்காத் தமிழர்
பண் பாட்டு பரிவுகள் மேவி
பண் பட்டுப் பாவை நின்றனள்!

இறப் பினும் வாழுமாறு சேவைச்
சிறப் புறம் சண்முகர் என்றநல்
அறக் கட்டளை ஆர்த்தனள்
மறப் பெண் மாமனிதம் அன்றோ!

கலை வாழும் பெரு நிலை
அலை சூழும் ஒரு மலை
விலை போகாத் தமிழர் தம்
தலை நகராம் திரு மலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் தமிழர் பெறு கல்வி
இங்கும் தரமாய் எழு வைத்தாள்
சிங்கம் போன்ற பெண் இளவே
தங்கம் மாவென்ற நன் மாதே!

சைவமும் தமிழும் சமமாய் ஒருங்கே
மெய்த்தவம் ஆகியே மேதினி ஓங்கிட
வையம் போற்றும் வகையுறு கல்வி
மையம் கொண்டே மாண்புறு திங்கே!

சென்னிகள் பத்தும் ஒன்றிய மன்னவன்
உன்னியே வாகை ஊன்றி நின்றனன்
வன்னியை வெந்நீர் கனலாய் ஆக்கினன்!

தென் புலத்தோர் கடன் அளிப்பு
தொன் தமிழர் மரபு ஆர்க்க
கன்னியா வென்னும் நல் ஊரில்
நன்பணி யாத்த நல் மாதே!

கூடி முந்த குயில்கள் உம்மைத்
தேடி வந்த போதும் செம்மை
ஈடிகை இரணந் தந்து உயர்
பீடிகை வாழ்வளித்த அன்னையே!

குஞ்சரச் சிந்தையாள் குலவது வானவள்
நெஞ்சக ஓவியம் நனவது மானதே
அஞ்சுகம் மேவியே ஆற்றலும் ஆகியே
விஞ்சிடும் சண்முகா வித்தி ஆலயம்!

ஏழைத் தமிழர் எட்டாக் கல்வி
கோழைத் தனம் குடி சாய்க்கத்
தோழைக் கொடுத்தற தாயே
மாழை விழிதிறக்கும் வித்தையின்று!

காலத்தால் அழியாக் கல்விக்
கோலத்தில் தமிழர் வாழத்
தூலத்தில் ஏற்றி வைத்தீர்
ஞாலத்தில் நீடுநீர் வாழ வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் நோக்கோடு ஒன்றிணைவோம் வாரீர்!

சீவரெட்ணம் மதியழகன்
B.A. (Cey), Dip. in Edu. M.Ed., S.L.P.S.I
கோட்டக்கல்வி பணிப்பாளர்.
வலயக் கல்வி அலுவலகம், திருகோணமலை.

திருகோணமலை மாவட்டத்தில் இல்லற வாழ்வில் சிறப்பு நிலையில் வாழ்ந்த அருள்தாஸ் வாஷிஹா தம்பதியினரின் முதல் வாரிசு திருமதி அருஷா ஜெயராஜா அவர்கள் ஆவார். திருமதி. அருஷா ஜெயராஜா அவர்களது இளமைக்காலம் இரு இளைய சகோதரர்களுடன் இனிமையாகவும், அமைதியாகவும் அமைந்திருந்தது. நூலாசிரியர் அருஷா அவர்கள் தரம் 01 முதல் வர்த்தகத் துறையில் உயர்கல்வி கற்கும்வரை தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலேயே கல்வியை கற்றிருந்தார். பாடசாலையில் கல்விகற்கும் காலத்தில் அவரது செயற்பாடுகளும், தலைமைத்துவ பண்புகளும் அவருக்கு மாணவ தலைவியாக பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தது. உயர்தரத்தில் வர்த்தக துறையில் இவர் கொண்டிருந்த ஈடுபாடு 2003-2004 காலப்பகுதியில் கல்லூரியில் H.N.B யால் அமைக்கப்பட்டிருந்த சேமிப்பு வங்கியில் மாணவ முகாமையாளராக பணியாற்றி வங்கியாளர்களது பாராட்டுக்களையும் பெற்றுக்கொடுத்து இருந்தது.

பாடசாலை கல்வியை நிறைவுசெய்துகொண்ட நூலாசிரியர் அவர்கள் உரிய காலத்தில் மணமாகி பேறாம் இரு ஆண் மகன்களுக்கும் தாயாகி சமூக அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர் அவர்கள் தேடல், ஆய்வியல், ஆவணப்படுத்தல் என்ற பக்கங்களை நோக்கியதாக செல்வதற்கான முயற்சியை அவரது கல்லூரிக் காலம் அவருக்குள் உருவாக்கி இருந்தது. இதன் விளைவாகவே கல்வித்துறையில் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்டு, பக்தி சார்ந்த ஏழை மாணவ மாணவியருக்கு உதவும் விடயங்களிலும் தன்னை இணைத்துக்கொண்டார். இணைப்பின் வெளிப்பாடாக "ஆதி மொழி உதவும் கரங்கள்" என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் வறிய மாணவர்களது கல்வி மேம்பாட்டுக்கு உதவி வருகிறார் மேலும் அன்பு இல்லக் குழந்தைகளின் நிர்வாக சபை உறுப்பினராகவும், இல்ல குழந்தைகளுக்கு ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வழிநடாத்தி வருகின்றார். சமய நோக்கில் திருக்கோணேஸ்வர ஆலய தொண்டர் சபை உறுப்பினராகவும் செயலாற்றி வருகின்றார். நூலாசிரியரது பணி கிறின்விச் சர்வதேச பாடசாலையில் இரண்டரை வருடங்கள் ஆங்கிலப் பாடம் மற்றும் சமய பாடம் கற்பித்தல் பணியாகவும் பரந்து இருந்தது.

தனது அனுபவமும், ஆற்றல் தன்மையும் காரணமாக "பரடைஸ் பிலே ஸ்கூல்" என்ற பாடசாலையை உருவாக்கி அதிபராகவும் பணியாற்றி உயர்வு பெற்றுள்ளார்.

நூலாசிரியர் அவர்கள் எழுத்து துறையில் முதல் பிரசவமென பிரசவித்து தந்திருப்புது "திருக்கோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி தாபகர் திருமதி. தங்கம்மா சண்முகம்பிள்ளை" என்ற ஆய்வியல் ஆவண இலக்கியமாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் அல்ல இலங்கையில் உள்ள இந்துதமிழ் பாடசாலைகளில் முன்னிலையில் மதிக்கப்படுகின்ற தி/ஸ்ரீ சண்முகா மகளிர் இந்துக் கல்லூரியை உருவாக்கிய அமரர் தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களது வரலாறுகளை அறிந்தவர்கள் எத்தனை பேர் உள்ளனர்? எதிர்காலத்தில் தங்கம்மா சண்முகம்பிள்ளை பற்றிய வரலாற்றுப் பதிவுகள் எமது சந்ததிக்கு கொண்டு செல்லப்படுவதற்கும், போற்றப்-படுவதற்கும் கூட இந்நூலாசிரியரது உணர்வு மதிக்கப்பட வேண்டியதும் பாராட்டப்படவேண்டியதும் ஆகும். அத்துடன் இந்நூல் வெளிப்படுத்-தன்மைனை ஆசிரியர் அவர்கள்

1. பழைய மாணவர் சங்கத்திற்கு உதவுதல்.
2. பாடசாலை முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தல்.
3. அன்னை தங்கம்மாவின் பெருமையை எடுத்துக்கூறுதல்.

என்ற தெளிவான நோக்கத்தோடு முன்வைத்திருப்பது, அவர் படித்த பாடசாலை மீதும், தங்கம்மா மீதும் அவருக்கிருக்கின்ற பக்தியை வெளிப்படுத்தி இருக்கின்றது.

எனவே இருக்கின்ற போதே பாராட்டுகின்ற தன்மை இல்லாமல் இருக்கின்ற இக்கால கட்டத்தில் இல்லாமல் இருக்கின்ற தங்கம்மா சண்முகம்பிள்ளையின் நினைவுகளை சுமந்து நிற்கும் நூலாசிரியரின் நூலின் நோக்கோடு ஒன்றிணைவோம் வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படப்பிடிப்பு - 02.07.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- நன்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org